**இரா.இராதிகா**
முனைவர்பட்ட ஆய்வாளர்
தமிழ்த்துறை
பெரியார் பல்கலைக்கழகம்
சேலம் - 636 011
மின்-அஞ்சல்: radhikatharun89@gmail.com

# சங்கத்தமிழரின் சடங்குமுறையில் உணவுமரபு

## முன்னுரை

உலகில் தோன்றியப் பல்வேறு உயிரினங்களில் பசியென்னும் உணர்வினை ஆற்றிக்கொண்டு ஆரோக்கியமாக வாழ்வதற்கான உணவுத் தேடல் மற்றும் உற்பத்தி முறையினைச் சிறந்த முறையில் கையாண்டவர்கள் மனிதர்களாவார். உணவுத் தேடல், உற்பத்தி முறை, உண்ணுதல் ஆகியவற்றில் மனிதனின் சிந்தனையே உந்துதலாக அமைகிறது. பழங்காலத்துப் பழக்கவழக்கங்களை நில அடிப்படையிலான சமுதாயத்திலிருந்து அடையாளம் காணமுடிகிறது. இவ்வகையான் உணவுப் பொருள்களை உற்பத்தி செய்யும் முறைகளில் குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை என்னும் ஐவகை நிலங்களிலும் மாறுதல்கள் உண்டு. இந்நிலங்களில் விளைவிக்கப்பட்டு பாதுகாக்கப்பட்ட உணவினை அந்தந்த நிலச் சமுதாயத்தினர் உண்டு உயிர் வாழ்ந்தனர். காலப்போக்கில் தங்களின் வாழ்வினுக்கு பயன்பட்டப் பொருட்களில் புனிதமானதாகக் கருதியதனைப் பல்வேறு நிகழ்வுகளில் வைத்து மரியாதைச் செய்ய எண்ணிய கருத்துநிலையேச் சடங்கு என்னும் நிகழ்வாக முகிழ்த்தன. ஆரம்பகாலக்கட்டத்தில் காரணகாரியங்களுடன் தொடர்புடையதாக இருந்த சடங்குமுறையில் பயன்படுத்தப்பட்ட உணவுப்பொருட்களின் முக்கியத்துவத்தையும் அதற்கானச் சிறப்பினையும் ஆராய்ந்து முன்னிலைப்படுத்துவது இக்கட்டுரையின் நோக்காக அமையவுள்ளது.

## இறைவழிபாடு

குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை என்னும் வகையிலான நிலப்பரப்பைக் கொண்ட பழங்கால மானுடர்கள் முறையே முருகன், திருமால், இந்திரன், வருணன், கொற்றவை ஆகிய கடவுளை வழிபடுவதனை மரபாகப் பின்பற்றியுள்ளனர். சங்க இலக்கிய நூல்களான 18 நூல்களும் 'கடவுள் வாழ்த்து' என்னும் முதற்பகுதியினை உடையதாக காணப்படுவதை நோக்கும் பொழுது சங்ககாலப் புலவர்கள் கடவுள்மீது கொண்டுள்ள ஈடுபாட்டையும் நம்பிக்கையினையும் நூல் இயற்றப்பட வேண்டிய முறையினையும் உணர்ந்துக்கொள்ள முடிகின்றது. இவற்றில் திருமுருகாற்றுப்படை முழுக்க முழுக்க கடவுள் வழிபாட்டிற்கான நூலாகவே இருக்கின்றது. இறைவனை வணங்குவது மற்றும் காணிக்கைச் செலுத்துவது சங்ககாலத்திலிருந்தே இருந்துள்ளமையை,

> "புனவன் துடவைப் பொன்போல் சிறுதினைக்
>
> கடிஉண் கடவுட்கு இட்ட செழுங்குரல்
>
> அறியாது உண்ட மஞ்ஞை" (குறுந்.பா,105, வரி:1:3,254)

என்ற பாடல் புலப்படுத்துகிறது. உணவுக்குத் தேவையான பொருட்களைப் பெறுவதற்கான வழிகளில் ஒன்றான உழைப்பினைத் தாண்டி இறைவன் மீது நம்பிக்கையுடைவர்களாகத் தமிழர்கள் இருந்துள்ளனர். தொழில் சிறப்பான முறையில் அமைந்து மென்மேலும் வளர்ச்சியடைவதற்கு உந்துசக்தியாக அமைவது கடவுளின் அருள் என்பதனால் தங்களால் விளைவிக்கப்பட்டு விளைந்த, சிவந்த நிறத்தினையுடையத் தினைக்கதிர்கள் சிலவற்றை குறிஞ்சி நிலவாழ் குறவன் முதன்முதலாக கடவுளுக்குப் பலியாக இட்டு வைத்துள்ளான். இயற்கைச் சீற்றங்களான இடி, மின்னல், மழை, காற்று இவற்றினால் எத்தகையத் தீங்கும் ஏற்படாதவாறு, பயிரானது வளரவேண்டியப் பருவங்களில் தேவையான இயற்கை நிகழ்வுகளைக் கொடுத்து, தேவைப்படாத பொழுது அவற்றை நிறுத்திவைத்து இயற்கையினைக் கட்டுப்படுத்தும் ஆற்றலாக கடவுளைக் கருதிய மனிதன் எப்பொழுதும் இத்தகைய உணவுப்பொருட்கள் நிறையக் கிடைக்க வேண்டும் என்ற காரணத்தினால் இறைவனுக்கு நன்றி செலுத்தி வழிபடுகிறான். மேலும் குறிஞ்சி நிலத்தின் உணவான தினை, அந்நிலத்தின் வளமைக் குறியீடாக பல்வேறுச் சடங்குகளில் பயன்படுத்தப்பட்டுள்ளது. ஆதிகால மக்களின் உணவுச்சார்ந்த இறைவழிபாட்டிற்கானக் காரணத்தினை “சங்ககால மக்கள் பல தெய்வத் தொகுதியில் நம்பிக்கை உடையவர். இத்தெய்வங்களை வணங்கிய மக்களின் பண்புகளுக்கும் இத்தெய்வங்களுக்கும் தொடர்பு உண்டு. இயற்கைப் பரப்பை இயக்கி ஆட்கொள்ளும் தனிமுதலை நோக்கித் தங்கள் வழிபாடுகளை ஆற்றி வந்தனர்”(பண்டைத்தமிழர் சமயமரபுகள், ப.2) என்று ‘The Tamils Eighteen Hundred Years ago 1903:416’ என்ற நூலாசிரியரின் கருத்தின் வழி அ.கா.பெருமாள் தெரிவிக்கின்றார்.

**வெறியாட்டு**

காதல் பிரிவினால் தலைவிக்கு உண்டான உடல்நிலை மாற்றம் பொன்போன்ற பசலை நோயினை உண்டு பண்ணியது. இந்நோய் கடவுள் குற்றத்தால் உண்டானது என்றும், நீர்நிலைகள் அல்லது அடர்ந்த குன்றுகளில் வாழும் அணங்கினால் உண்டானது என்றும் கருதியத் தலைவியின் தாய் அவளுக்கு வெறியாட்டு என்னும் சடங்கினை நிகழ்த்துகிறாள். இச்சடங்கானது வேலன் என்பானை அழைத்து வெறிகொண்டு ஆடும் செயலாக அமைகிறது. இந்நிகழ்வின் பொழுது குறிஞ்நிலத் தலைவனான முருக கடவுளுக்கு வெறிக்களம் அமைத்து ஆட்டுகிடாயினை அறுத்து பலியிட்டனர்.(நற்.பா.49) இன்றும் சிறுதெய்வ வழிபாட்டின் பொழுது ஆட்டினை பலியிடும் வழக்கம் தமிழகத்தில் உள்ளது. ஆனால் அக்காலத்தில் இன்று, பெரும் தெய்வமென்று கருதும் முருகனுக்கு உயிர்பலியிடும் வழக்கம் இருந்துள்ளது எண்ணுதற்குரியதாகும். குறிஞ்சிநிலக் கடவுளாக மட்டும் இருந்த முருகன் பிற்காலங்களில் அனைவராலும் வழங்கபட்டமையே இதுபோன்ற மாறுதலுக்கு காரணமாக இருக்கக்கூடும். மேலும் தினையினைக் குருதியில் கலந்து தூவி வழிபட்டதை,

> “உருவச் செந்தினை குருதியொடு தூஉய்” (குறிஞ்சி.22)

என்ற வரிகளால் அறியமுடிகிறது. இந்நிலையிலானச் சடங்கின் தொடர்ச்சியாக இன்றும், தெய்வங்களுக்குப் பலியிட்ட ஆட்டின் இரத்தம் கலந்தச் சோற்றினைக் குழந்தைப்பேறு இல்லாதப் பெண்களுக்கு உண்ணக் கொடுத்தால் குழந்தைப்பேறு கிட்டும் என்ற நம்பிக்கைக்

காணப்படுகிறது. வெறியாட்டில், முருகன் வாழுவதாக நம்பப்படும் இடங்களில், பொரியினைத் தூவுகின்ற பழக்கம் முன்னோர்களான தமிழ்குடியிடம் இருந்துள்ளது. தினை, ஆட்டின் இரத்தம், பொரி ஆகிய உணவுகள் வெறியாட்டு என்னும் சடங்கில் பயன்படுத்தப்பட்டது போல பேயோட்டும் நிலையிலான இன்றையச் சடங்குகளில் இத்தகையப் பொருட்கள் இடம்பெறுகிறது. இத்தகையச் சடங்கினை பயன்படுத்தியதற்கான காரணத்தினை “தொல்தமிழ் இனக்குழுவினர் இயற்கை ஆற்றல்களைக் கட்டுப்படுத்துவதற்கும் அணங்கு, சூர், பேய், பூதம் இவற்றால் தாக்கப்பட்டதிலிருந்து விடுபடவும் பல்வேறு வகையானப் பாவனைச் சடங்குகளையும் தொத்து மந்திரச் சடங்குகளையும் செய்துள்ளனர்”(இலக்கிய மானிடவியல்,ப.185) என்ற கருத்தின் மூலமாக பக்வத்சல பாரதி எடுத்துரைகிறார்.

**சுறா வழிபாடு**

நெய்தல் நிலத்தில் வாழுகின்ற பரதவர்கள் சுறாவழிபாட்டினை மேற்கொள்ளும் பொழுது சுறாமீனின் கொம்பை நட்டு அதற்கு மலர்சூட்டி வலிமையுடையத் தெய்வத்தை அதன்மீது நிறுத்தி கடற்தெய்வத்தை வணங்குவர். அவ்விழாவின் பொழுது பனங்கள்ளையும், நெல்லினால் செய்யப்பட்ட கள்ளினையும் அருந்துகின்றனர்(பட்டினம்.87-88). மீன்களில் சுறாமீன் வலிமை மிக்கதாக, அதனை வேட்டையாடுவது சிறந்த வீரமாக கருதியப் பரதவர்கள் இதனை வளச்சடங்காகவே பின்பற்றியுள்ளனர். கடலில் மீன்கள் நிறையக் கிடைக்கவும், வலிமையுடன் மீன்வேட்டையினை மேற்கொள்ளவும் கிடைத்த மீன்களினால் தான் பெற்ற இன்பத்தைத் துய்யக்கவும் இதுபோன்ற நிகழ்வுகள் பழக்கமாக அமைந்துள்ளன. இத்தகையச் சுறவுக்கோட்டினை நட்டு விழா எடுக்கும் வழக்கத்தினை(நற்.பா.19,வரி.1-5,ப.33)என்ற பாடல் எடுத்துரைக்கின்றது. சுறாவழிபாட்டில் கள் என்னும் உணவு பயன்படுத்தப்பட்டுள்ளதை தாண்டி உணவுப் பொருளான சுறாமீனின் கொம்பே இறைவனாகப் பரதவர்களால் வணங்கப்பட்டுள்ளது. இதுபோன்ற நிகழ்வுகளினால் உணவுப்பொருளுக்கான நிலைப்பாட்டையும் அந்த உணவுப்பொருள்கள் குறிபிட்ட குலத்திற்கான குலக்குறியாகவும் விளங்கியதனை “ஒவ்வொரு குலமும் ஒரு குறிப்பிட்ட விலங்கினத்துடனோ அல்லது தாவர இனத்துடனோ தொடர்புபடுத்தப்பட்டிருந்தது. அந்தக் குறிபிட்ட விலங்கோ அல்லது தாவரமோ அக்குலத்தின் குலக்குறியாகியது. உணவு தேடுதலில்தான் குலக்குறித் தொடர்புகளுக்கான அர்த்தமும் தேவையும் இருந்தது”(மனிதசாரம், ப.68) என்று ஜார்ஜ் தாம்சனின் கூற்றானது முன்மொழிகிறது.

**விரிச்சி கேட்டல்**

ஒரு செயலினைச் செய்யத் தொடங்கும் முன்னர், அச்செயலானது நன்முறையில் நடைபெற்று வெற்றிக்கிடைக்குமா என்பதனை அறிந்துக்கொள்வதற்குப் பண்டையத் தமிழர்கள் பயன்படுத்திய உத்தியே விரிச்சி கேட்டலாகும். ஒரு வினையினை மேற்கொள்ளும் பொழுது எதார்த்தமாக கேட்கக்கூடிய சொல் அல்லது ஒலி நல்லனவாக இருந்தால் எதிர்கொள்ளும் வினை நன்முறையில் அமையும், நற்சொல்லாக இல்லையாயின் தீமை நேரும் எனக் கருதி எதிர்கொள்ள வேண்டிய வினையினை மேற்கொள்ளாது கைவிட்டுவிடுவர். இத்தகைய நற்சொல்லென்னும் விரிச்சியினைக் கூறுபவருக்குப் பொன்னும், பொருளும் கொடுப்பதுடன் அமுதம் போன்ற உணவினை உண்பதற்கு கொடுத்துள்ளனர். இதனை,

“அமுதம் உண்கநம் அயலி லாட்டி”(நற்.பா:65,வரி.1,ப.166)

என்ற வரியானது முன்மொழிகிறது. விரிச்சி சொல்வோருக்கு நெல் வழங்கப்பட்டமையை நெடுநல்வாடை பதிவுச்செய்கிறது.

**கள்ளுண்டு களித்தல்**

சங்ககாலச் சமுதாயமானது போர் வாழ்வினை மையமிட்டதாக காணப்படுகிறது. போருக்குச் செல்வதற்கு முன்னும், போரில் வெற்றி பெற்றதற்குப் பின்பும் கள்ளுண்ணல் மரபாகும். பகைவரின் அரண்களை அழித்துப் பிறகு சுற்றத்தாரோடு கூடி கள்ளுண்ணுதல் பண்டையப் போர் வாழ்வியலைச் சார்ந்ததாகும். இதனை,

“அருப்பம் பேணாது அமர் கடநத்தூஉம்

துணைபுணர் ஆயமொடு தசும்பு உடன் தொலைச்சி

இரும் பாண் ஒக்கற் கடும்பு புரந்ததூஉம்”(புறம்,பா.224, வரி:1-3,ப.531)

என்ற பாடலானது இயம்புகிறது.

இன்றும், விழாக்களின் பொழுதும் இறப்பின் பொழுதும் மது உண்ணும் முறை காணப்படுகிறது. ஆனால் அக்காலங்களில் மது என்பது மகிழ்வூட்டும் மற்றும் வலிமைத்தரும் உணவாகவே இருந்துள்ளது.

**திருமணச் சடங்கு**

திருமண விழாவிற்கு வருகைத்தந்திருக்கும் உறவினர்களுக்கு உணவு சமைத்து உண்பித்தல் ஒரு பழக்கமாக பழங்கால மக்களிடம் கையாளப்பட்டுள்ளது. திருமணநாளில் பல்வேறு சடங்குகள் நடைபெற்று கொண்டிருந்த வேளையில் உழுத்தம் பருப்புடன் சேர்த்து பெருஞ்சோற்று திரளான பொங்கலைச் சுற்றதாருக்கு விருந்தளித்தமையை,

“உழுந்து தலைப்பெய்த கொழுங்களி மிதவை

பெருஞ் சோற்று அமலை நிற்ப”(அகம்.பா.86, வரி.1-2, ப.256)

என்ற வரிகள் கூறுகிறது. மேலும் மணமக்களை குலமகளிர் சேர்ந்து வாழ்த்தும் பொழுது ‘நெல்’ என்னும் உணவுப் பொருளுடன் மலர் சேர்த்து தலையில் தூவி வாழ்த்தியுள்ளனர். நெல்லானது மக்களின் வாழ்வினை வளம் பெறச் செய்வது போல் மணமக்களும் பயிர்போல செழித்து வளர்ந்து நெல் போன்று பயன் உடையவர்களாக வாழ வேண்டுவதற்கான நோக்கத்தால் ‘நெல்’ மணச்சடங்கில் இடம்பெற்றிருக்கக்கூடும். ‘நெல்’ முல்லை நிலத்தின் வளமை குறியீடாகும். இதனை வேளாண் சமூகத்தினர் உற்பத்தி செய்துள்ளனர். இன்றும் மணவிழாவில் நெல்லுக்குப் பதிலாக அரிசியினை மஞ்சள் கலந்து மணமக்கள் தலையில் தூவி வாழ்த்துகின்றனர்.

நெய்யினை சேர்த்து செய்த வெண்சோற்றுடன், இறைச்சியினையும் சேர்த்து விருந்தினருக்கு மருதநில மக்கள் அளித்துள்ளமையை (அகம்.பா.1-3, வரி.1-2,ப.412) என்ற

பாடல்வரி பதிவுச்செய்கிறது. மணமகள் கணவன் வீட்டில் புதுச்சோறு சமைத்தலை ஒரு சடங்காகச் செய்துவந்தமையை (அகம்.141) பாடல் கூறுகிறது. திருமணத்தில் இறைச்சி சமைத்தல் இன்றைய வழக்கத்தில் இல்லாமல் போய்விட்டது.

**இறந்தோருக்கு – உணவுப் படைத்தல்**

இறந்தவர்களுக்கு உணவுப் படைத்தல் முன்னோர் வழிபாடாகக் கருதப்படுகிறது. சிறிய இடத்தை மெழுகி அதன்மேல் தர்ப்பைப் புல்லினை பரப்பி சுவையில்லாத உணவு பிண்டத்தை அதன்மேல் வைத்து இறந்தவர்களுக்குப் படைக்கும் சடங்கினை,

‘‘பிடி அடி அன்ன சிறுவழி மெழுகி

தன்அமர் காதலி புல்மேல் வைத்த

இன்சிறு பிண்டம் யாங்கு உண்டனன்கொல்’’(புறம்.பா,234, வரி:2-4,ப.549)

என்ற புறப்பாடல் விளக்குகிறது. போரில் இறந்தவர்களுக்கு நடுகல்வைத்து அதற்கு மயிற்பீலி அணிவித்து, கள் என்னும் மதுவினை வைத்து வழிப்பட்டுள்ளனர்(புறம்.பா,232, வரி:3-4,ப.547). இறந்தவர்கள் பயன்படுத்தியப் பொருள், அவர்கள் விரும்பி உண்ட உணவு போன்றவற்றை இதுபோன்ற முன்னோர் வழிபாட்டில் வைத்து வணங்குவதால் இறந்தவர்கள் அமைதியடைந்து, அவர்களின் சுற்றத்தைப் பாதுகாத்து, நாட்டில் மழைபெய்து வளம்பெற செய்வர் என்ற நம்பிக்கையுடையவராக சங்ககாலச் சமுதாயத்தினர் இருந்துள்ளனர்.

**கைம்பெண் - உணவுக் கட்டுபாடு**

கணவனை இழந்தப் பெண்கள் கைம்பெண்கள் என்று அழைக்கப்படுகின்றனர். பெரும்பான்மையாக கணவனின் இறப்பிற்கு பின் உடன்கட்டை ஏறும் நிலையில் வாழ்ந்த பெண்கள் தன்னைச் சார்ந்த குழந்தைகளுக்காகவோ அல்லது குடும்பத்தினரைக் காப்பாற்றக் கூடிய சூழ்நிலையிலோ கைம்மை நோன்பேற்று ‘கைம்பெண்’ என்னும் அடையாளத்தை ஏற்று வாழ்ந்துள்ளனர். இவர்கள் உண்ணும் உணவு முறைகளில் கட்டுபாடு விதிக்கப்பட்டிருந்தது. அணிகலன்களை நீக்கிவிட்டு கூந்தல் மழிக்கப்பட்ட மொட்டைத் தலையுடன் நீர்சோற்றுடன், புளிச்சேர்த்த வேளைகீரையினை உண்ண வேண்டும் (புறம்.245). சோற்றில் நெய் சேர்க்கப்பட கூடாது. பச்சை இலைகளை உண்ணுவார்கள். அல்லிஅரிசி உணவினை உண்பர். இத்தகைய உணவுக் கட்டுப்பாடானது கைம்பெண்களின் உணர்வுகளைக் கட்டுபடுத்தி வாழவைக்கும் நெறிமுறைகளுக்காக பயன்படுத்தியிருக்கக் கூடும் என்று நம்பப்படுகிறது.

**முடிவுரை**

மனிதனின் வாழ்க்கையானது பிறப்பில் தொடங்கி இறப்பில் முடிவடைந்தப் போதிலும் இடைப்பட்ட காலங்களில் நில அடிப்படையில் வாழ்ந்துவந்த சமூகத்தினர் அவர்களுக்கென்ற பண்பாட்டினை கடைபிடித்து வாழ்ந்ததினால்தான் மனிதன் என்ற உயர்நிலையினை அடையமுடிந்தது. சடங்கென்பது வெற்று செயல் போல் அல்லாமல் மக்களின் வாழ்வியலுக்கானத் தேவை, பயன், உணர்வுநிலை, நம்பிக்கை போன்ற கூறுகளை உள்ளடக்கி கொண்டதாக உள்ளது. நெல், திணை போன்ற உணவுப்பொருள்கள் அவற்றின் தேவை, பயன்

கருதி வாழ்வில் வளம் சேர்க்கும் பொருளாக, இறைவழிபாடு, திருமணவிழா, வெறியாட்டு, இறப்பு, போன்ற நிகழ்வுகளில் பயன்படுத்தப்பட்டுள்ளது. சங்ககாலத்தில் அந்தந்த பகுதிகளில் உற்பத்தி செய்யப்பட்ட உணவுப்பொருள்களை அவ்வநில சமூகத்தினர் சடங்குகளில் பயன்படுத்தியுள்ளனர். இன்று சாதி பிரிவுகளுக்கிடையேயான சடங்குமுறைகளில் மாறுதல் காணப்படுவதும் இதுபோன்ற வழக்கத்தின் காரணமாக ஏற்பட்டதே ஆகும். மேலும் கைம்பெண்களுக்கான உணவுக் கட்டுபாட்டிற்கென்று சில காரணங்களைக் கூறி கொண்டாலும் அதைதாண்டிய ஒரு ஆணாதிக்க போக்கிற்கான கொடுமைகளையும் கருத வேண்டியுள்ளது. பழங்காலத்துச் சடங்குமுறைகளைக் காரண காரியங்களுடன் ஆராய்ந்து பார்க்கும்பொழுது இக்காலங்களில் நடைபெறும் வெற்று செயல் என்று கருதக்கூடிய சடங்குப் பண்பாட்டிற்கான முக்கியத்துவமும் அறியாமை போக்கும், நன்கு விளங்கும் என்பது ஆய்வின் முடிபாகும்.

**பார்வை நூல்கள்**

1.சங்கஇலக்கியம் - கு.வெ.பாலசுப்பிரமணியன்(உ.ஆ), நியூ நெஞ்சுரி புக் ஹவுஸ்(பி) லிட்,41-பி, சிட்கோ இண்டஸ்டிரியல் எஸ்டேட், அம்பத்தூர், சென்னை-98. ஐந்தாம் பதிப்பு –அக்டோபர் 2014.

2.பண்டையத்தமிழர் சமயமரபுகள் - பக்தவத்சல பாரதி(ப.ஆ), வெளியீடு:புதுச்சேரி மொழியியல் பண்பாட்டு ஆராய்ச்சி நிறுவனம், புதுச்சேரி, முதற்பதிப்பு-மார்ச்சு 2011.

3.இலக்கிய மானிடவியல்- பக்தவத்சல பாரதி, வெளியீடு: அடையாளம் பதிப்பகம், சென்னை. புதிப்பு-ஜனவரி 2014.

4.மனித சாரம் - ஜார்ஜ் தாம்ஸன், வெளியீடு: நியூ நெஞ்சுரி புக் ஹவுஸ்(பி) லிட், 41-பி, சிட்கோ இண்டஸ்டிரியல் எஸ்டேட், அம்பத்தூர், சென்னை-98. ஐந்தாம் பதிப்பு –அக்டோபர் 2014.